# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): ஜூன் 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **ஆகஸ்ட் 09, 2019**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 ஜூன் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டது. 2019ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.2% இனால் அதிகரித்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 ஜூன் மற்றும் 2018 ஜூன் மாதங்களில் முறையே 107.3 மற்றும் 105.0 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ காலாண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜூன் - 2019 | **107.3** |
| ஜூன் - 2018 | **105.0** |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) : **2.2** | |
| | |
| 2ஆம் காலாண்டு 2019 : **103.4** | |

2018 ஜூன் மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2019 ஜூன் மாதத்திற்கான ‘கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்’, ‘கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்’ மற்றும் ‘மரத் தளபாடங்கள் உற்பத்தி’ என்பனவற்றில் முறையே 42.7%, 22.3% மற்றும் 19.9% என குறிப்பிடக்கூடிய உற்பத்தி அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.

ஆயினும், இக்காலப் பகுதியில் ‘ஏனைய உற்பத்திகள்’ (மோட்டார் வாகன உற்பத்தி, ஏனைய போக்குவரத்து சாதனங்கள், ‘பார ஊர்திகள்’ மற்றும் ‘ஆபரணங்கள்’ என்பன அடங்கும்), ‘வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள்’ மற்றும் ‘அச்சிடுதலும் ஊடக தயாரிப்புக்களை மீள் பிரதி எடுத்தலும்’ என்பன முறையே 36.6%, 24.6% மற்றும் 23.4% வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அத்துடன் 2018 ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஜூன் மாதத்திற்கான உணவு உற்பத்திக் கைத்தொழில் 0.1%ஆல் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உற்பத்திக் கைத்தொழில்களில் 2018ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் **2019ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு** உற்பத்திகள் 0.6%ஆல் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2019ஆம் ஆண்டின் ஜூன் மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# Department of Census and Statistics

## Index of Industrial Production (IIP) - 2019

(2015 = 100)

**107.3**

**June**

IIP is an index which measures short term trends in the volume of Industrial Production

**2.2%**

Year on Year change

(2019 June - 2018 June)

Significant changes by sector June 2019







**Table 01 : IIP of June of 2019 & 2018 and Year on Year changes (2015=100)**

| ISIC 2digit | Description | 2018 June[R] | 2019 June[P] | Year on Year (%) Change June 2019/ June 2018 |
|---|---|---|---|---|
| 10 | Food products | 102.7 | 102.5 | -0.1 |
| 11 | Beverages | 104.6 | 102.8 | -1.7 |
| 12 | Tobacco products | 93.1 | 83.3 | -10.5 |
| 13 | Manufacture of Textiles | 124.3 | 116.1 | -6.7 |
| 14 | Manufacture of wearing Apparels | 113.6 | 116.8 | 2.8 |
| 15 | Manufacture of leather and related products | 106.7 | 119.3 | 11.7 |
| 16 | Manufacture of wood and products of wood and cork except furniture; manufacture of articles of Straw and plaiting materials | 113.2 | 114.0 | 0.7 |
| 17 | Manufacture of paper and paper products | 79.0 | 112.7 | 42.7 |
| 18 | Printing and reproduction of recorded media | 113.9 | 87.3 | -23.4 |
| 19 | Manufacture of coke (coal) and refined petroleum products | 92.7 | 113.4 | 22.3 |
| 20 | Manufacture of chemicals & chemical products | 89.0 | 100.6 | 13.1 |
| 21 | Manufacture of basic pharmaceutical products and pharmaceutical preparations | 98.1 | 97.1 | -1.1 |
| 22 | Manufacture of rubber & plastic products | 116.8 | 94.0 | -19.5 |
| 23 | Manufacture of other non-metallic mineral products | 104.7 | 122.9 | 17.3 |
| 24 | Manufacture of basic metals | 124.8 | 130.2 | 4.4 |
| 25 | Manufacture of fabricated metal products ( except machinery equipment ) | 126.9 | 95.8 | -24.6 |
| 26-27 | Manufacture of electrical equipment | 79.2 | 87.2 | 10.2 |
| 28 | Manufacture of Machinery & equipment (n.e.c.) | 100.8 | 94.7 | -6.1 |
| 31 | Manufacture of furniture | 73.4 | 88.0 | 19.9 |
| 29-30-32-33 | Other manufacturing | 97.1 | 61.6 | -36.6 |
| | **Overall Index for the Manufacturing Sector** | **105.0** | **107.3** | **2.2** |

P-Provisional; R-Revised


Director General
Department of Census and Statistics
Contact No. 0112147001